1969 செப்டம்பர் 13]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : *தலைவர் அவர்களே, நான் விடையிலேயே இதைக் குறிப்பிட்டேன். இப்போது இலவசக் கல்வி புகுத்தப்பட்டதால், தனியார் பள்ளி நிர்வாகிகள் செலுத்த வேண்டிய 3 சதவீதத்தையும் சேர்த்து 6 சதவீதத்தை அரசினரே செலுத்துகின்றனர்.*

திரு. எம். பூபதி : *தலைவர் அவர்களே, ஆசிரியர் வைப்பு நிதித் தொகையிலிருந்து, அவர்களுக்கு 50 சதவீதத்திற்கு மேல் கடன் உதவி செய்யலாம் என்று அரசு திட்டமிடுமா ?*

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : *தலைவர் அவர்களே, குறிப்பிட்ட அளவிற்குத் தொகை சேர்ந்த பிறகு குறிப்பிட்ட சதவீத அளவு கடன் உதவி பெறலாம் என்றிருக்கிறது. எவ்வளவு சதவீதம் கடன்பெறலாம் என்ற குறிப்பு தற்போது என்னிடத்தில் இல்லை. வைப்பு நிதியிலிருந்து அவர்களுக்குக் கடன் தொகை கொடுக்கின்ற முயற்சி இருந்து வருகிறது.*

Pay of teachers in Government Colleges.

* 272. *Q.*—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether all the teachers both permanent and temporary in the Government Pre-University Colleges in the State are being paid the scale of pay as recommended by the University Grants Commission?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : *ஆம்.*

More Polytechnics for Tamil Nadu.

* 273. *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Htalth be pleased to state—

(*a*) whether the Government propose to start two more Polytechnics in the State from the next academic year (1969-70); and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன். *(அ) இல்லை.*

(இ) இக் கேள்விக்கிடமில்லை.

THIRU K. VINAYAKAM : Sir, was there not a notification in the Press by the Technical Education Department that they were thinking in terms of floating two more Polytechnics in our State? மு.ப. 9–30

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : *தலைவர் அவர்களே, 1969-70-ல் தொழில் நுட்பப் பள்ளி திறக்கப்படுவதாக இல்லை. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 6 தொழில் நுட்பப் பள்ளிகளிலும் 622 மாணவர்கள் இருந்தனர். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 35 தொழில் நுட்பப் பள்ளிகள் இருந்தன. ஆண்டு ஒன்றுக்கு 4,800 மாணவர்கள் வீதம் பயிற்சி பெற்று வந்தனர்.*

[1969 செப்டம்பர் 13

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அரசினர் துறையில் ஐந்து பள்ளிகளும், தனியார் துறையில் இரண்டு பள்ளிகளும் திறக்கப் படுவதாக முடிவு செய்யப்பட்டது. பின்னர் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் திருத்தப்பட்ட வகையில், அரசினர் சார்பாக தொழில் நுட்பப் பள்ளி எதுவும் திறக்கப்பட வேண்டாம் என்றும், ஆனல் தனியார் துறையில் யாராவது தொழில் நுட்பப் பள்ளியைத் திறக்க முன்வந்தால் அவர்களுக்கு அரசு உதவியளிக்கலாம் என்றும் வகை செய்யப்பட்டிருக்கிறது. இப்போது இருக்கிற 35 தொழில் நுட்பப் பள்ளிகளில் சேர வேண்டிய அளவிற்கு மாணவர்கள் வந்து சேரவில்லை. முன்பு இருந்த கவர்ச்சி இப்போது இல்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் மேற் கொண்டதற்குப் பிறகு நாட்டிலே தொழில் அறிவு பெற்றவர் களுடைய தேவை ஏற்படலாம். தனியார் துறையில் இரண்டு தொழில் நுட்பப் பள்ளிகளைத் திறக்க யாராவது முன்வந்தால் அவர்களுக்கு உதவியளிக்க அரசு பத்து லட்சம் ரூபாய் ஒதுக்கி யிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, ஐ.டி.ஐ. போன்ற தொழில் நுட்பப் பள்ளிகளில் பயிற்சி பெற்ற மாணவர்கள் வேலை யில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க அரசு ஏதேனும் திட்டம் வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் உரிய காலத்தில் துவக்காததன் காரணமாக, இரண்டு மூன்று ஆண்டுகளில் பல்வேறு முயற்சிகள் தேங்கியிருக்கின்றன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பித்த பிறகு அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படலாம். அரசாங்கம் எந்தத் திட்டத்தையாவது தீட்டி ஒரு சில மாதங்களிலே அவர்களுடைய பிரச்சினைகள் அத்தனையையும் போக்குவதற்கான வழிவகைகள் இல்லை. ஐ.டி.ஐ.-யில் பயிற்சி பெற்றவர்களுக்கு வருங்காலத்தில் வேலைவாய்ப்பு இருக்கிறது. பாலிடெக்னிக், என்ஜினியரிங் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு குறைவாக இருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பிறகு இந்தக் குறை தீர்க்கப்படும்.

Medical facilities for Kalpakkam Atomic Plant Area

* 274. *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether medical facilities have been provided at the Kalpakkam Atomic Plant area?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: ஆம்.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: பேரவைத் தலைவர் அவர்களே, கல்பாக்கம் அணுமின் நிலையப் பகுதி குடியிருப்புகளில் இருப்பவர் களுக்கு வைத்திய உதவியளிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?